## இலங்கை உயர் தொழிநுட்ப கல்வி நிறுவகம் - 2013

இலங்கை உயர் தொழிநுட்ப கல்வி நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1995 இன் 29 ஆம் இலக்கஇலங்கை உயர் தொழிநுட்ப கல்வி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 19ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2 நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை இலங்கை உயர் தொழிநுட்ப கல்வி நிறுவகத்தின் 2013திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

**இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02**

மீளாய்வாண்டின் போது காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் உட்பாய்ச்சல் என்பவற்றை பிரதிபலிக்கும் வகையில் நியமங்களுக்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படாமல் இருந்ததுடன், தயாரிக்கப்பட்டிருந்த காசுப் பாய்ச்சல் கூற்றில் கீழே காட்டப்பட்டுள்ள பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆண்டின் போது இரண்டு செயற்திட்டங்களிலிருந்து கிடைத்த ரூபா 2,529,547,742 தொகை பெறுமதியான சொத்துக்கள் காசுப் பாய்ச்சல் கூற்றில்முதலீட்டுசெயற்பாடுகளில் உருவான காசாக காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டின் போது 21 ஆம் நூற்றாண்டு உயர் கல்வி செயற்திட்டத்திலிருந்து நிறுவகத்திற்கு கிடைத்த ரூபா 3,568,211 ஆன சொத்துக்கள் மீளாய்வாண்டின் போது முதலீட்டு செயற்பாடுகளினால் உருவான சொத்தாக காசுப் பாய்ச்சல் கூற்றிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டிற்குரிய மீளாய்வாண்டின் போது திரண்ட இலாபத்தில் சீராக்கப்பட்ட பெறுமானத் தேய்வு ஏற்பாடு மற்றும் திரட்டிய நிதியத்திற்கு செய்யப்பட்ட ஏனைய சீராக்கங்கள் உட்பட மொத்தம் ரூபா 573,525,100 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் மீளாய்வாண்டின் நட்டத்தில் சீராக்கப்பட்டிருந்தது.

(ஈ) காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் உட்பாய்ச்சல் என்பவற்றிற்கு உரித்தல்லாத முன்னைய ஆண்டின் வழுக்களை திருத்துதல், செயற்திட்டங்களிலிருந்து சொத்துக்கள் பெறுவனவு மற்றும் ஏனைய விளக்கமளிக்க முடியாத கொடுக்கல் வாங்கல்கள் உட்பட ரூபா 1,273,790,250 ஆன சீராக்கங்கள் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப் பெறுமதி குறிப்பாக குறிப்பிடப்படாத நிறுவகத்திற்கு எதிராக தொழில் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள 3 வழக்குகளுக்காகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு செய்துள்ள 7 முறைப்பாடுகள் தொடர்பாகவும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கல்விசார் பதவியணியில் 03 உத்தியோகத்தர்கள் விடுமுறை பெற்றுக்கொண்டு வெளிநாடு சென்றிருந்துடன், உடன்படிக்கை மீறிய காரணத்தால் அவர்களிடமிருந்து நிறுவகத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,526,314 தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) லபுதுவ உயர் தொழிநுட்ப நிறுவகத்தில் சேவையிலீடுபட்டிருந்த 2013 யூன் மாதம் முதல் நவம்பர் வரை சம்பளமற்ற விடுமுறை பெற்றுக்கொண்டிருந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புத் தொகையாக ரூபா 31,447 செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டிற்குரிய வழுக்களைத் திருத்துதல் முன்னெச்சரிக்கையாக திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்ப்பட்டிருந்த போதிலும், அதற்கு இணங்க நிதி நிலைமைக்கூற்றில் முன்னைய பல ஆண்டுகளாக திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) சொத்தொன்று பயன்பாட்டிற்காக பொருத்தமான நிலைமைக்கு உட்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து சொத்திற்கு பெறுமானத்தேய்வு செய்தல் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக சொத்தொன்று கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டிலிருந்து பெறுமானத்தேய்வு செய்யப்படாமை என்ற கொள்கை பின்பற்றப்பட்டிருந்தது.

**2.2.3 பெறவேண்டிய கணக்குகள்**

இலங்கை உயர் தொழிநுட்ப நிறுவகத்திலிருந்து சேவையிலிருந்து விலகியுள்ள 7 உத்தியோகத்தர்களுக்கும் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கும் வழங்கப்பட்டிருந்த ரூபா 495,441 கூட்டுத்தொகையான இடர் கடன் மீதி மற்றும் அதற்குரிய வட்டி என்பனவற்றை குறித்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

கணக்காய்வின் போது பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 2010 திசெம்பர் 10 ஆம் திகதிய 01/2010 ஆம் இலக்க வர்த்தகத் தீர்வை வரி மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கையின் (1)(உ) பிரிவு | 12 ஆண்டுகள் தொடர்ச்சியான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் இந்த முன்மொழிவு முறைமையின் பிரகாரம் சலுகை மோட்டார் வண்டி இறக்குமதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு தகைமை பெற்றுக் கொண்டிருக்க வேண்டிய போதிலும், கருத்திற் கொள்ளப்பட்ட 12 ஆண்டு காலப்பகுதியில் தனிப்பட்ட தேவைக்காக 1 ஆண்டு சம்பளமற்ற லீவு பெற்றுக்கொண்டிருந்த உத்தியோகத்தர் ஒருவருக்கும் |

| | | |
|---|---|---|
| | | சலுகை மோட்டார் வண்டி இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஎடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.8.9 ஆம் பிரிவு மற்றும் 1997 சனவரி 24 ஆம் திகதிய 116 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | உயர் தொழிநுட்ப நிறுவகத்தில் மூன்று அமைய தொழிலாளர்கள் அமைச்சின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன்,இதற்காக நிறுவகத்தால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 623,720 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 135 | 2013 ஆம் ஆண்டிற்காக நிறுவகத்தின் நிதி அதிகாரப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.2.1 உப பிரிவு | உத்தியோகபூர்வ விடுதிகளில் குடியிருக்கும் உத்தியோகத்தர்களின் அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதமும் திருமணமாகியிருந்தால் துணைவியின் அடிப்படைச் சம்பளத்தில் 2½சதவீதமும் ஆக மொத்த வாடகையாக அடிப்படைச் சம்பளத்தில் 12½சதவீதம் அறவிடப்பட வேண்டிய போதிலும், லபுதுவ உயர் தொழிநுட்ப நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் 2012 மார்ச் 05 ஆம் திகதியில் இருந்து 2013 மார்ச் 25 ஆம் திகதி வரை உத்தியோகபூர்வ விடுதியில் குடியிருந்தமைக்காக அவ்வாறு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 46,681,748 பற்றாக்குறையாக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 108,514,206 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 61,832,488 ஆல் வீழ்ச்சியடைந்தமைக்கு பயிற்சி மற்றும் மதிப்பீட்டுச் செலவினங்கள் ரூபா 2,957,062 ஆல் குறைவடைந்தமையும் 2013 ஆம் ஆண்டிலிருந்து சொத்துக்களின் பெறுமானத் தேய்வும் குறிப்பாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உயர் தொழிநுட்ப நிறுவகத்தால் நடாத்தப்படும் பாடநெறிகளுக்காக 2013 ஆம் ஆண்டின் போது சேர்க்கப்பட்ட சதவீதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 18 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டின் போது உயர் தொழிநுட்ப நிறுவகத்தால் நடாத்தப்பட்ட 12 உயர் தேசிய பாடநெறிகளுக்குரிய பரீட்சையில் சித்தியடைதலின் திரட்டிய சதவீதம் 48 ஆக இருந்தது.

### 4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

இலங்கை உயர் தொழிநுட்ப கல்வி நிறுவகத்தின் அம்பாறை, மட்டக்குளி, லபுதுவ, பதுளை, கண்டி, கேகாலை, யாழ்ப்பாணம், அநுராதபுரம், மட்டக்களப்பு, சம்மாந்துறை, தங்காலை, இரத்தினபுரி, வவுனியா மற்றும் நைவல ஆகிய உயர் தொழிநுட்ப நிறுவகங்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள் அமைந்துள்ள காணி 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நிறுவகத்திற்கு பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை உயர் தொழிநுட்ப கல்வி நிறுவகத்தின் 02 பதவிகளுக்காக பல்கலைக்கழகங்களில் சேவை புரியும் விரிவுரையாளர்கள் சேர்ததுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் அப்பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் உரித்தான சம்பளம் மற்றும் படிகள் (அண்ணளவாக) மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு மீளளிக்க வேண்டிய சம்பளத்திற்கு இடையே வேறுபாடு இருந்தமையால் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் சம்பள அளவை விட ரூபா 1,802,281 தொகை சம்பளமாக 2013 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. அத்தோடு நிறுகத்தின் பணிப்பாளர்கள் நிறுவகத்தினுள்ளே பதவி உயர்வு மூலம் நியமிக்காமல் பதவியில் சம்பளம் மற்றும் படிகளை விட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுடன் இரண்டாம் அடிப்படையில் வெளித்தரப்பினர் சேர்த்துக்கொள்ளப்பட்ட காரணத்தால் நிறுவகத்தில் பதவி உயர்வு பெறும் நோக்கில் இருக்கும் உத்தியோகத்தர்களுக்கு இருந்த சந்தர்ப்பங்கள் இழக்கப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் நிர்வாக சபை கூட்ட இலக்கம் 15/137 இன் பிரகாரம் இரண்டாம் அடிப்படையில் நியமிக்கப்பட்ட நைவெல உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தின் பணிப்பாளருக்கு இரண்டாம் அடிப்படையில் உரித்தான சம்பளத்திற்குப் பதிலாக மீளாய்வாண்டின் போது மொத்த சம்பமும் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) ''21 ஆவது நூற்றாண்டின் உயர் கல்வி செயற்திட்டத்தின்'' நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 20,057,993 பெறுமதியான கணனி மற்றும் மென்பொருட்கள் இலங்கை உயர் தொழிநுட்ப கல்வி நிறுவகத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக கணக்காய்விற்குத்தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அப்பெறுமானம் ரூபா 18,160,652 ஆக இருந்தது.

### 4.4 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

2012 திசெம்பர் 31 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த அநுராதபுரம் உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2014 யூலை 31 ஆம் திகதி வரை பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் அதன் பௌதீக செயன்முன்னேற்றம் 60 சதவீதமாக இருந்ததுடன், நிதிச் செயல்முன்னேற்றம் 17 சதவீதமாக இருந்தது.

### 4.5 பதவியணியினர் நிருவாகம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கல்விசார் பதவியணிக்குரித்தாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 264 ஆக இருந்ததுடன், வெற்றிடங்களின் எண்ணிக்கை 41 ஆக இருந்தது. கல்விசாரா பதவியணிக்குரித்தாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை 292 ஆக இருந்ததுடன், வெற்றிடங்களின் எண்ணிக்கை 57 ஆக இருந்தது. அதன் பிரகாரம் பதவியணியில் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 98 ஆக இருந்தது.

## 5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 2 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய நிறுவகத்தின் அமைப்பு வரைபடம், முன்னைய ஆண்டுகளுக்கான செயற்பாட்டு விளைவுகள் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் (பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களையும் குறிப்பிட்டு) இந்நிறுவகத்தின் கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் வருடாந்த பாதீடும் நிதிக்கூற்றுக்களுடன் ஒத்திசைந்து போகாமையால் செயல்நடவடிக்கைத் திட்ட இலக்கை எய்தும் செயல்முன்னேற்றம் தொடர்பாக கணக்காய்வின் போது பரிசோதிக்க முடியாதிருந்தது.

### 5.3 கொள்வனவுத் திட்டம்

2013 ஆம் ஆண்டில் ரூபா 75,094,057 தொகைக்கு நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 வருடாந்த அறிக்கை சபையில் சமர்ப்பித்தல்

2012 இன் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) இருப்புக் கட்டுப்பாடு
(இ) நூலக நிர்வாகம்
(ஈ) பாடவிடாதனங்களை தயாரித்தல், மாணவர்களை சேர்த்துக்கொள்ளல் மற்றும் விரிவுரைகளை நடாத்துதல்
(உ) விடுதிக் கட்டுப்பாடு